தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2025

## வளர்தமிழ் 10

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
4 AV DES PRIMEVERES
77290 MITRY MORY
WWW.tamiledc.com

TEDC -FR TEDC -FR

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |



TEDC -FR

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்

அ) 247 ☐ ஆ) 100 ☐

இ) 217 ☐ ஈ) 20 ☐

2. காவிரியை ஓர் இளமங்கையாக உருவகித்துப் பாடியவர்

அ) பாவேந்தர் ☐ ஆ) கம்பர் ☐

இ) இளங்கோவடிகள் ☐ ஈ) நல்லத்துவனார் ☐

3. வடவரின் பழிப்புச் சொல் கேட்டுக் கொதித்தெழுந்த செங்குட்டுவனைச் "சினம் தணிக" என்று கூறினார் அமைச்சர். ________ செங்குட்டுவனோ சினம் தணியாது போர்முரசு அறைந்தான்.

அ) ஆனால் ☐ ஆ) எனவே ☐

இ) ஏனென்றால் ☐ ஈ) ஆகையால் ☐

4. துயில் என்பதன் பொருள்

அ) ஆரவாரம் ☐ ஆ) கனிவு ☐

இ) விழிப்பு ☐ ஈ) உறக்கம் ☐

5. இந்தியா முழுவதும் முன்னாளில் ________ என அழைக்கப்பட்டது.

அ) நயினாதீவு ☐ ஆ) அனலைதீவு ☐

இ) நாவலந்தீவு ☐ ஈ) நாகதீபம் ☐

6. பின்வருவனவற்றுள் தொடர்மொழி

அ) இராப்பகல் ☐ ஆ) நாற்காலி ☐

இ) செவ்வாய் ☐ ஈ) தங்கை ☐

TEDC -FR TEDC -FR

7. கடற்கலம் செலுத்துவோன்

அ) பாகன் ☐ ஆ) வலவன் ☐
இ) மீகாமன் ☐ ஈ) இடையன் ☐

8. இராசராசன் தஞ்சைப்பெருங்கோவிலைக் கட்டுவித்தான். இதில் கட்டுவித்தான் என்பது

அ) தன்வினை ☐ ஆ) செயப்பாட்டுவினை ☐
இ) குறிப்புவினை ☐ ஈ) பிறவினை ☐

9. முட்பற்றை என்பதைப் பிரித்தெழுதினால்

அ) முட் + பற்றை ☐ ஆ) முள்ப் + பற்றை ☐
இ) முற் + பற்றை ☐ ஈ) முள் + பற்றை ☐

10. மாதவி தன்னுடைய நடன அரங்கேற்றத்தில் ____________ வகையான கூத்துகளை ஆடினாள்.

அ) 11 ☐ ஆ) 9 ☐
இ) 6 ☐ ஈ) 12 ☐

11. செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்ற காலம்

அ) பனிகாலம் ☐ ஆ) இளவேனிற்காலம் ☐
இ) கோடைகாலம் ☐ ஈ) இலைஉதிர்காலம் ☐

12. இடியோசை கேட்ட நாகம் போல இது

அ) அடுக்குத் தொடர் ☐ ஆ) இணைமொழி ☐
இ) உவமைத்தொடர் ☐ ஈ) அடுக்கிடுக்குத்தொடர் ☐

13. சேரமன்னரின் கொடி

அ) மீன்கொடி ☐ ആ) விற்கொடி ☐
இ) புலிக்கொடி ☐ ஈ) நந்திக்கொடி ☐



TEDC -FR

TEDC -FR TEDC -FR

14. 'ய்' என்னும் உடம்படுமெய் தோன்றிய சொல்

அ) கையேடு ☐ ஆ) கண்ணாடி ☐
இ) மாவிலை ☐ ஈ ) பூவரும்பு ☐

15. இந்தியாவுக்கும் பாகித்தானுக்கும் இடையே ஓடிய ஆறு

அ) குமரிஆறு ☐ ஆ) பஃறுளிஆறு ☐
இ) சிந்துஆறு ☐ ஈ ) வைகைஆறு ☐

16. கருமை, இனிமை, வட்டம் என்பன

அ) சினைப்பெயர் ☐ ஆ) குணப்பெயர் ☐
இ) தொழிற்பெயர் ☐ ஈ ) பொருட்பெயர் ☐

17. தீமை ஒழிக! என்பது

அ) கூற்றுச் சொல்லியம் ☐ ஆ) வினாச் சொல்லியம் ☐
இ) வியங்கோட் சொல்லியம் ☐ ஈ ) ஏவற் சொல்லியம் ☐

18. 'திராவிட மொழிநூல் ஞாயிறு' என்ற பட்டத்தைப் பெற்றவர்

அ) மறைமலையடிகள் ☐ ஆ) தேவநேயப்பாவாணர் ☐
இ) தனிநாயகம் அடிகள் ☐ ஈ ) ஆறுமுகநாவலர் ☐

19. வைக்கோலின் தொகுதியைக் குறிக்கும் மரபுப்பெயர்

அ) குவியல் ☐ ஆ) தோப்பு ☐
இ) கூட்டம் ☐ ஈ ) கற்றை ☐

20. சேரன் செங்குட்டுவனின் மனைவி

அ) கண்ணகி ☐ ஆ) வண்டார்குழலி ☐
இ) வேண்மாள் ☐ ஈ ) மணிமேகலை ☐



TEDC -FR

TEDC -FR
TEDC -FR

21. தமிழ் ஆட்சிமொழியாக உள்ள நாடு

அ) இந்தோனேசியா ☐ ஆ) மொறீசியசு ☐
இ) மியான்மார் ☐ ஈ ) சிங்கப்பூர் ☐

22. இலையான் என்பதைக் குறிக்கும் ஓரெழுத்துச் சொல்

அ) ஈ ☐ ஆ) ஊ ☐
இ) ஆ ☐ ஈ ) ஐ ☐

23. தங்கை வற்றல் உண்டாள். இது

அ) இடவாகுபெயர் ☐ ஆ) குணவாகுபெயர் ☐
இ) தொழிலாகுபெயர் ☐ ஈ ) காலவாகுபெயர் ☐

24. மரத்திலிருந்து கனிந்த பழங்கள் விழுந்தன. இச் சொல்லியம் உணர்த்தும் பொருள்

அ) நீங்கற்பொருள் ☐ ஆ) ஏதுப்பொருள் ☐
இ) எல்லைப்பொருள் ☐ ஈ ) ஒப்புப்பொருள் ☐

25. காகம் கத்தியது. இது

அ) திணைவழு ☐ ஆ) மரபுவழு ☐
இ) பால்வழு ☐ ஈ ) இடவழு ☐

புள்ளிகள் 25


TEDC -FR

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இன்றைய திருச்சி மாவட்டத்திலிருந்து தெற்கு ஆந்திரா வரையிலான பகுதியே கழககாலத்தில் சோழநாடு என அழைக்கப்பட்டது. சோழர்களின் தலைநகரம் முதலில் உறையூரிலும் பின்னர் புகாரிலும் இருந்தது. கழககாலச் சோழர்களில் சிறப்பு வாய்ந்தவன் கரிகாற்சோழன். கரிகாலனது இளமைக்காலப் போர் வெற்றிகள் பற்றிப் பட்டினப்பாலை என்னும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சேரர், பாண்டியர் மற்றும் குறுநில மன்னர்கள் அடங்கிய படைகளைக் கரிகாலன் வெண்ணிப் போரில் முறியடித்தான். கரிகாலன் வாகைப் பறந்தலை என்னும் போரில் ஒன்பது குறுநில மன்னர்களை மண்டியிடச் செய்தான். கரிகாலனின் போர் வெற்றிகள் தமிழ்நாடு முழுவதையும் சோழரின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தன. அவனது ஆட்சிக் காலத்தில் வணிகமும் செழித்தோங்கியது. கரிகாலன் காடுகளைத் திருத்தி விளை நிலமாக்கினான். இதனால் நாட்டின் செல்வச் செழிப்பு பெருகியது. காவிரி ஆற்றின் குறுக்கே கரிகாலன் கட்டிய கல்லணை அவனது பெரும் புகழுக்குக் கரணியம் ஆகும்.

TEDC -FR

TEDC -FR

1. கழககாலச் சோழர்களில் சிறப்பு வாய்ந்தவன் யார்?

______________________________________________

______________________________________________

2. கரிகாலன் எப்போரில் ஒன்பது குறுநில மன்னர்களை மண்டியிடச் செய்தான்?

______________________________________________

______________________________________________

3. கரிகாலனின் பெரும் புகழுக்குக் கரணியம் யாது?

______________________________________________

______________________________________________

4. எப்பகுதி கழக காலத்தில் சோழநாடு என அழைக்கப்பட்டது?

______________________________________________

______________________________________________

5. எவை பட்டினப்பாலை என்னும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10



TEDC -FR

TEDC -FR TEDC -FR

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. இலங்கையரசின் குடியுரிமைச் சட்டத்தால் குடியுரிமையை இழந்தவர்கள் யார்?

___

2. இலெமூரியாக் கண்டத்தின் பழந்தமிழ்ப்பெயர் என்ன?

___

3. வில்லடிக்கு இசைவாகப் பயன்படுத்தப்படும் தாளக்கருவிகள் இரண்டைத் தருக.

___

4. கோவலன், கண்ணகி கதையைச் செங்குட்டுவனுக்குக் கூறியவர் யார்?

___

5. இன்றைய ஈரான், ஈராக் நாடுகளின் முன்னைய பெயர் என்ன?

___

6. திருக்குறளில் 'இல்வாழ்க்கை' எத்தனையாம் அதிகாரமாக இடம்பெற்றுள்ளது?

___

7. சேரன் செங்குட்டுவனது வடதிசைச் செலவு பற்றி எங்கே பறை அறையப்பட்டது?

___

புள்ளிகள் 10



TEDC -FR

**4. பின்வரும் கவிதைத் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. காலைப்பொழுது

2. மலர்கள்

புள்ளிகள் 10

## 5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

அது ஒரு மருதநிலம். மருதநிலத்தில் நீர்வளம் மிகுந்து இருப்பதால் நிலத்திணைகள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன. அதன் பயனாகச் சோலைகள் பூத்துக் குலுங்குகின்றன. மருதநிலத்தின் சிறப்புக்குரிய மரங்களில் ஒன்று மருதமரம். இந்த மரம் வானுற ஓங்கி வளர்ந்து ஆண்டின் எல்லாக் காலங்களிலும் செக்கச்செவேல் என மலர் சுமந்து நிற்கும். அங்கு நீர்ப்பறவைகளின் ஆரவாரம் எந்நேரமும் கேட்கும். எங்கும் பச்சைப்பசேலெனக் காட்சியளிக்கும் நெல்வயல்கள்; அந்நெல்வயல்களில் கொத்துக்கொத்தாக விளைந்து நிற்கும் நெற்கதிர்கள் எனப் பார்க்கும் இடமெல்லாம் கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்படுகின்றது.

1. சுட்டுப்பெயர் ஒன்று தருக.

________________________________________

2. காட்சியளிக்கும் இச்சொல்லைப் பிரித்து எழுதுக.

________________________________________

3. அடுக்கிடுக்குத்தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

________________________________________

4. சிறப்புப் பெயரோடு பொதுப்பெயருக்கு எடுத்துக்காட்டுத் தருக.

________________________________________

5. வினையெச்சம் ஒன்று தருக.

________________________________________

புள்ளிகள் 10

TEDC -FR
TEDC -FR

**ஆ) 1. தரப்பட்டுள்ள சொல்லியங்களில் தோன்றா உறுப்புகளையும் அச்சொற்களையும் கண்டறிந்து எழுதுக.**

| | **தோன்றாஉறுப்புகள்** | **சொற்கள்** |
|---|---|---|
| எப்பொழுது பாடினாய்? | | |
| அவர்கள் நன்றாக ஆடினர். | | |
| நேற்று நல்ல மழை | | |

புள்ளிகள் 03

**2. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தருக.**

1. இடுகுறிப்பெயர் ________________________________

2. குறிப்புவினை ________________________________

புள்ளிகள் 02


TEDC -FR

TEDC -FR TEDC -FR

6) **தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

சிறுதுளி

சிரிக்குமாம் ஆனைக்கும்

வாழ்வு ஒன்றுபட்டால் பெரு குருத்தோலை

காவோலை அடி வெள்ளம் விழக் நிறைகுடம்

சறுக்கும் உண்டு தளம்பாது

1. எல்லாருக்கும் முதுமை வரும்.

______________________________

2. ஒற்றுமையான வாழ்வு.

______________________________

3. பெரியோரும் தவறு செய்யலாம்.

______________________________

4. அறிவின் அடக்கம்.

______________________________

5. தேட்டத்தின் பெருமை.

______________________________

புள்ளிகள் 05



TEDC -FR

## 7) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

வலை கலை குறைத்து வளை குரைத்து களை

1. எலி தனது ______________ யில் உணவைச் சேமித்து வைக்கும்.
2. உருவத்தைப் பார்த்து நாம் யாரையும் ______________ மதிப்பிடக் கூடாது.
3. நான் நாட்டியக் ______________ யைக் கற்க ஆவலாக உள்ளேன்.
4. வீட்டில் நின்ற நாய் வீதியாற் செல்வோரைப் பார்த்துக் ______________க் கொண்டிருந்தது.
5. பெண்கள் நெல்வயலில் ______________ பிடுங்கினர்.

புள்ளிகள் 05

## 8) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.

1. பழியஞ்சிப் ______________ உடைத்தாயின் வாழ்க்கை
   வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்

   ( பாத்தூண், காத்தூண், கற்றூண் )

2. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் ______________

   ( இது, இல், அது )

புள்ளிகள் 05

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தமிழர் புலப்பெயர்வும் இடப்பெயர்வும்
- வில்லுப்பாட்டு
- தாய்மொழிக்கல்வியின் அகத்தியம்
- நான் ஒரு பறவையானால்

புள்ளிகள் 15

TEDC -FR TEDC -FR



TEDC -FR